உ

சிவமயம்

# தோத்திரத் திரட்டு

யாழ்ப்பாணம், கந்தர்மடம்

வை. சி. சி. கு. பிரமானந்தா அவர்களின்

புதல்வன்

## செல்வன் சச்சிதானந்தன்

( தம்பா )

# நினைவு மலர்

தோற்றம்: 26-11-51.      மறைவு: 27-9-60.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# திருஞானசம்பந்தர் தேவாரம்

சூலம்படை சுண்ணப் பொடி சாந்தஞ் சுடுநீறு
பாலம்மதி பவளச் சடை முடிமேலது பண்டைக்
காலன் வலிகாலினேடு போக்கிக் கடிகமழும்
நீலம் மலர் பொய்கை நின்றியூரின் நிலையோர்க்கே.

அச்சம்மிலர் பாவம் மிலர்கேடும் மிலரடியார்
நிச்சம் முறுநோயும் மிலர்தாமுந் நின்றியூரில்
நச்சம் மிடறுடையார் நறுங் கொன்றை நயந்தாளும்
பச்சம் முடையடிகள் திருப்பாதம பணிவாரே.

பறையின்னெலி சங்கின்னெலி பாங்கா ரவுமார
அறையும மொலியெங்கும் மவையறிவா ரவர்தன்மை
நிறையும் புனல்சடை மேலுறையடிகள் நின்றியூரில்
உறையும் மிறையல்ல தெனதுள்ளம் முணராதே.

மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கியாது மோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளோடும் பெருந்தகை யிருந்ததே.

போதையார் பொற்கிண் ணத்தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே.

தொண்டணை செய்தொழிற் றுயரறுத் துய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்துணை யாகவோர் பெருந்தகை யிருந்ததே.

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

நம்பனே எங்கள்கோவே நாதனே ஆதிமூர்த்தி
பங்கனே பரமயோகி என்றென்றே பரவிநாளும்
செம்பொனே பவளக்குன்றே திகழ்மலர்ப் பாதங்காண்பான்
அன்பனே அலந்துபோனேன் அதிகை வீரட்டனீரே.

பொய்யினால் மிடைந்த போர்வை புரைபுரை அழுகிவீழ
மெய்யனாய் வாழமாட்டேன் வேண்டிற்றொன் றைவர் வேண்டார்
செய்ய தாமரைகளன்ன சேவடி இரண்டுங் காண்பான்
ஐயநான் அலந்துபோனேன் அதிகை வீரட்டனீரே.

நீதியால் வாழமாட்டேன் நித்தலுந் தூயே னல்லேன்
ஓதியும் உணரமாட்டேன் உன்னையுள் வைக்க மாட்டேன்
சோதியே சுடரேயுன்றன் தூமலர்ப் பாதங் காண்பான்
ஆதியே அலந்துபோனேன் அதிகை வீரட்டனீரே.

கொல்லத்தான் நமனார் தமர் வந்தக்கால்
இல்லத்தார் செய்ய லாவதென் ஏழைகாள்
நல்லத்தான் நமையா ளுடையான் கழல்
சொல்லத்தான் வல்லீரேல் துயர் தீருமே.

பொக்கம் பேசிப் பொழுது கழியாதே
துக்கந் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்விதகர்த்த தழல் வண்ணன்
நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே.

பிணிகொள் வார்குழற் பேதையர் காதலால்
பணிகள் மேவிப்பய னில்லைப் பாவிகாள்
அணுக வேண்டில் அரன் நெறியாவது
நணுகு நாதன் நகர்திரு நல்லமே.

மூவனை மூர்த்தியை மூவாமேனியுடையானை
மூவுலகுந்தா னேயெங்கும்
பாவனைப் பாவமறுப்பான் தன்னைப் படியெழுத
லாகாத மங்கையோடு
மேவனை விண்ணோர் நடுங்கக் கண்டு
விரிகடலின் நஞ்சுண்டமுத மீந்த
தேவனைத் தென்கூடல் திருவாலவாய் சிவனடியே
சிந்திக்கப் பெற்றேன் நானே.

துறந்தார்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னைத்
துன்பந்துடைத்தாளவல்லான் தன்னை
இறந்தார்க ளென்பேயணிந்தான் தன்னை
யெல்லி நடமாடவல்லான் தன்னை
மறந்தார்மதில் மூன்றும் மாய்த்தான் தன்னை
மற்றொருபற்றில்லா அடியேற்கென்றும்
சிறந்தானைத் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே
சிந்திக்கப் பெற்றேன் நானே.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற கருத்தானைக்
கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த் திங்கட் சடையானைத தொடர்ந்து நின்
தாயானைத் தவமாய தன்மையானைத் தலையாய [றென்
தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவாலவாய்ச் சிவனடியே
சிந்திக்கப் பெற்றேன் நானே.

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

அழுக்கு மெய்கொடுன் திருவடியடைந்தேன்
அதுவு நான்படப் பாலதொன்றானால்
பிழுக்கை வாரியும் பால் கொள்வரடிகேள்
பிழைப்பனாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால்
மற்றுநான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக் கொரு மருந்துரையாய்
ஒற்றியூரெனு மூருறை வானே.

கட்டனேன் பிறந்தே னுனக்காளாய்க் காதற்
சங்கிலி காரணமாக
எட்டினாற் றிகழுந் திருமூர்த்தியென் செய்வா
னடியேனை டுத்துரைக்கேன்
பெட்டனாகிலுந் திருவடிப் பிழையேன்
பிழைப்பனாகிலுந் திருவடிக்கடிமை
ஒட்டினேனென்னை நீ செய்வ தெல்லா
மொற்றியூரெனு மூருறை வானே.

கங்கை தங்கிய சடையுடைக்கரும்பே கட்டியே
பலர்க்குங்களை கண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடையமுதேயத்தா
வென்னிடரார்க் கெடுத்துரைக்கேன்
சங்கும் இப்பியுஞ் சலஞ்சலம் முரல
வயிரமுத்தொடு பொன்மணிவரன்றி
ஓங்குமா கடலோதம் வந்துலவு
மொற்றியூரெனு மூருறைவானே.

## திருவாசகம்

### சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்
தாள்வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன்அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி

சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தைவினை முழுதும் ஓயஉரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய்விளங்கு
ஒளியாய்
எண்இறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்அடிகள் கண்டுஇன்று
வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா! வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே.
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்அறிவே
ஆக்கம் அளவு இறுதிஇல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்
மறைந்திட மூடிய மாய இருளை [தன்னை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலாச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவ புரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ் சம் கெடப்
பேராதுநின்ற பெருங்கருணைப் பேர் ஆறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றனே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்ருப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார்
தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர்ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்
உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவுஆம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்ருன உண்ணூர் அமுதே உடையானே
வேற்றுவிகார விடக் குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானுர்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்ருடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென் பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து
சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து !

## குழைத்த பத்து

குழைத்தால் பண்டைக் கொடுவினை நோய் காவாய்
உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி உண்டோதான் ? உமையாள்
கணவா எனை ஆள்வாய்
பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ? பிறைசேர்
சடையாய் முறையோ என்று
அழைத்தால் அருளாது ஒழிவதே அம்மானே உன்
அடியாற்கே?

அடியேன் அல்லல் எல்லாம் முன்அகல ஆண்டாய்
என்று இருந்தேன்
கொடிஏர் இடையாள் கூறு! எம்கோவே! ஆவா
என்று அருளிச்
செடிசேர் உடலைச் சிதையாதது எத்துக்கு எங்கள்
சிவலோகா!
உடையாய்! கூவிப் பணிக்கொள்ளாது ஒறுத்தால்
ஒன்றும் போதுமே?

ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட
நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான் ஏழை பங்கா
எம்கோவே?
குன்றே அனைய குற்றங்கள் குணம்ஆம் என்றே நீ
கொண்டால்
என்தான் கெட்டது? இரங்கிடாய் எண்தோள்
முக்கண் எம்மானே!

## திருவிசைப்பா

ஏக நாயகனை யிமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை யன்றி மற்றொன்று
முண்டென வுணர்கிலேன் யானே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய்
உன்றன் திருநடங் கும்பிடப்பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணிலானந்த அருவிநீர் சொரிய
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினுல் நீடி அறிவரும் பதிகம்
பாடினுர் பரவினுர் பணிந்தார்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக்குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமேயாக

இந்துவார் சடையானுடும் எல்லையில்
 தனிப்பெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
 மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புத கோலம்நீடி அருமறைச் சிரத்தின்மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல்
 போற்றிபோற்றி.

வான்முகில் வழாதுபெய்க மழைவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## திருப்புகழ்

ஏது புத்திஐ யாஎ னக்கினி
 யாரை நத்திடு வேன வத்தினி
 லேயி றத்தல்கொ லோஎ னக்குநி தந்தைதாயென்
றேயி ருக்கவு நானு மிப்படி
 யேத வித்திட வோச கத்தவ
 ரேச லிற்பட வோந கைத்தவர் கண்கள் காணப்

பாதம் வைத்திடை யாத ரித்தெனை
 தாளில் வைக்க நியேம றுத்திடில்
 பார்ந கைக்குமை யாத கப்பன்முன் மைந்தனேடிப்
பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்
 யாரே டுப்பதெ னவெ றுத்தழ
 பார்வி டுப்பர்க ளோஎ னக்கிது சிந்தியாதோ

ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல எட்டிகை நீச முட்டரை
யோட வெட்டிய பாநு சத்திகை எங்கள் கோவே
ஓத மொய்ச்சடை யாட வுற்றமர்
மான்ம ழுக்கர மாட பொற்கழ
லோசை பெற்றிட வேந டித்தவர் தந்த வாழ்வே
மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே
மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாமலைப்பதி தம்பிரானே.

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் முடிக்குஞ்
செகுத்தவ ருயிர்க்குஞ் சினமாகாச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம் யாம்
நினைத்தது மளிக்கும் மனததையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல் தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங்
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் பெருமாளே.

## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொளித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்

தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு முகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

திருச்சிற்றம்பலம்.

---

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.—292/60.